செய்தி வெளியீடு எண்:597 நாள் :24.11.2014

# பத்திரிக்கை செய்தி

சென்னை மாவட்டம், ராயபுரத்தில் ஒரே வளாகத்தில் இயங்கி வந்த 8 (இளங்கலை, முதுகலை, ஐ.டி.ஐ) விடுதிகளில், 2 விடுதிகளைச் சார்ந்த 175 மாணவிகளை, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்ட, வேப்பேரி ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிக்கு 22.11.2014 அன்று இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

அவ்விடுதிகள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ந. சுப்ரமணியன் அவர்களால் 24.11.2014 இன்று ஆய்வுசெய்யப்பட்டது. விடுதி மாணவியரிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவ்விடுதிகளில் வழங்கப்படும் அடிப்படை வசதிகளின் நிலை மற்றும் உணவுகள் வழங்கப்படுவதை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால், விடுதியினை தூய்மையாக வைத்துக் கொள்ளவும், நன்முறையில் கல்வி கற்றிடவும், நன்நெறி வலியுறுத்தப்பட்டது.

மேலும் இன்று (24.11.2014) சென்னை, ராயபுரத்தில் உள்ள அரசு (ஆதிந) முதுகலை மாணவர் விடுதி மற்றும் அரசு (ஆதிந) பள்ளி மாணவர் விடுதிகள் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுதிகளின் நீர்தேக்கத்தொட்டி, சமையலறை மற்றும் கழிவறைகளை தூய்மையாக வைத்துக்கொள்ள காப்பாளர்களை அறிவுறுத்தினார். விடுதி ஆய்வின் போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர், திருமதி கண்ணகி பாக்கியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர், திரு எஸ். சிவசண்முக ராஜா, இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**